[4th February 1966

மதுரை மாவட்டத்தில் மஞ்சள் காமாலை

*98 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : திரு. ஆ. தங்கவேலு : } கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) மதுரை மாவட்டத்தில் மஞ்சள் காமாலை நோய் பாவி வருவது சர்க்காரின் கவனத்திற்கு வந்ததா ?

(இ) ஆமெனில் என்ன தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) மதுரை மாவட்டத்தில் மஞ்சள் காமாலை நோய் பரவிவரவில்லை. திண்டுக்கல் நகராட்சிப் பகுதியிலும், மதுரை நகராட்சிப் பகுதியிலும் மஞ்சள் காமாலை நோயின் அறிகுறிகளுடன் இங்கொன்றும் அங்கொன்றுமாக இந்நோய் சிலருக்கு ஏற்பட்டது. தடுப்பு முறையாக, குடிநீர் வழங்கல் ஆதாரமும், ஏனைய நீர் நிலைகளும் க்ளோரின் மருந்தால் தூய்மை ஆக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து எடுத்த நீரின் மாதிரிகளைப் பாகுபாடு செய்ததன் மூலம் கண்டு பிடித்த குறைபாடுகளைச் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படிச் சம்பந்தப்பட்ட நகராட்சிகளைக் கேட்டுள்ளோம். பொதுச் சுகாதாரப் பணியாளர்கள் ஹோட்டல்கள் அனைத்தையும் அவை துப்புரவாக வைக்கப்பட்டுள்ளனவா என அவ்வப்போது பார்வையிட்டனர். தூசு படிந்து, ஈ மொய்த்த உணவுப் பண்டங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தால் அவை கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன. ஆரம்பச் சுகாதார நிலையங்களின் மருத்துவ அதிகாரிகள் அனைவரும் அவசியமான நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர்.

திரு. ஆ. தங்கவேலு : இந்த மஞ்சள் காமாலை நோய் எப்படி ஏற்படுகிறது ? என்பதை அறியமுடியுமா ?

கனம் சபாநாயகர் : இது டெக்னிக்கல் க்வஸ்சின்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இது ஒரு டெக்னிக்கல் க்வஸ்சின். குடிதண்ணீரில் அழுக்கு கலந்திருப்பதால் வருகிறது என்பது டாக்டர்களின் ஒப்பினியன்.

MR. SPEAKER : So, for further questions, the hon. Member can go to a doctor.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, since jaundice is prevalent not only in the Madurai district but also in other places, will the Government take preventive measures to arrest the spread of this disease ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Yes, all necessary precautions have been taken by chlorinating the drinking water and, as a precautionary measure, the protected water supply sources have also been chlorinated.